## மண்முனை தென்மேற்கு பிரதேசசபை-2013

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 ஏப்ரல் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 06 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மண்முனை தென்மேற்கு பிரதேசசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதுஎனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்கசுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றிநிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடு

மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டியரூபா.16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதுச் சந்தைக் கடைகளை வாடகைக்குப் பெற்றவர்களிடமிருந்து 2010 முதல் 2012 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள ரூபா.232,000 தொகையை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி ரூபா.343,139 ஐ அறவிடுவதற்கு 2014 யூலை 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ''ஜெய்கா''திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளருக்கு அச்செயற்திட்டத்திற்காக இணைக்கப்பட்ட தொழினுட்ப உதவியாளருக்கான சம்பளமாக 2012ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட முற்பணங்கள் ரூபா.47,255 ஐ அறவீடு செய்வதற்கு சபையால் 2014 யூலை 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை.

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| காணி கட்டடிடம் | 134,144,716 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதி இயந்திரங்கள் | 1,027,926 | நிலையான சொத்துப் பதிவேடுகள், சொத்துக்கள் பற்றிய விபரமான பட்டியல் மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள். |
| தளபாடங்கள் | 4,867,033 | |
| நூலக புத்தகங்கள் | 1,530,911 | |

1.3.5 சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
| --- | --- | --- |
| (அ)) 1987 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி, நிருவாகவிதிகள் | | |
| (i) | அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அத்தியாயம் III இன் பிரிவு 81 | காணி உரிமைமாற்றல் சம்மந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கும் ஏனைய கொடுக்கல் வாங்கல் சம்மந்தமான தீர்வைகளை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் பொதுத் திறைசேரியின் பணிப்பாளருக்கும் தண்டப்பணங்களை மீளளிப்புச் செய்யக்கோரும் விண்ணப்பங்கள் நீதிமன்றங்களின் பதிவாளருக்கும் ஓவ்வொரு காலாண்டு இறுதியிலும் சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுகளின்படி 2013திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம்

ரூபா.2,972,227ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா. 1,053,645ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா.1,918,582முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

------------------------------------------

2.2.1 வீதவரிகள்

-----------------

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2005 ஆம் ஆண்டுதொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை வீதவரியை அறவீடு செய்ய சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

----------------------------------------------------------------------------------------------------

(அ) முத்திரைக் கட்டணம்

------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக்கட்டணத் தொகையினை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

----------------------------------------

(அ) "USAID" நிறுவனத்தால் 2011 ஆம் ஆண்டு நன்கொடையாக வழங்கப்பட்ட "Roller மற்றும்"Twin Drum Roller" என்பன திருத்தம் செய்யப்படடாததின் காரணமாக இரண்டு வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் சபையின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை 2014 மே 30 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் உள்ள 12 கடைகளில், 03 கடைகளை குத்தகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2014 யூலை 31 வரைவிளைவற்று காணப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1. உள்ளகக் கணக்காய்வு

---

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வுப்பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வுபிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ள படியான செலவினத்திற்கும் இடையில் 50% தொடக்கம் 75% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒருவினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேடகவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு